Ramaswamy Moodr

இது

பட்டணத்துப்பிள்ளையார்

அருளிச்செய்தபாடல்

இதனுள்

முதல்வன்முறையீடு. அருட்புலம்பல்*

நெஞ்சொடுபுலம்பல். பூரணமாலை...*

நெஞ்சொடுமகிழ்தல். வண்ணம்

இவ்வாறும்அடங்கியிருக்கின்றன.

சாரம்

குமரப்பமுதலியாரால்

பலபிரதிகளைக்கொண்டுபரிசோதித்து

சென்னபட்டணத்தில்

ஸ்ரீ. விசாகப்பெருமாளையரது

கல்விவிளக்கஅச்சுக்கூடத்தில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டன.

இதன்விலை. அணா. அ

விகாரிஞு - ஆவணிமீ.

இரண்டாவதுபுத்தகம்.

LIBRARY 1939

சிவமயம்.

பட்டணத்துப்பிள்ளையார்

முதல்வன் முறையீடு.

(கன்னிவனநாதா கன்னிவனநாதா.)

மூலமறியேன்முடியுமுடிவறியேன்
ஞாலத்துட்பட்டதுயர்நாடறிக்குதடா

அறியாமையாமலத்தாலறிவுமுதற்கெட்டனடா
பிறியாவினைப்பயனாற்பித்துப்பிடித்தனடா

தனுவாதியநான்குந்தானாய்மயங்கினண்டா
மனுவாதிசத்திவலையிலகப்பட்டனடா

மாமாயையென்னும்வனத்திலலைகிறண்டா
தாமாயுலகனைத்துந்தானாகலங்கிறண்டா (௧)

(கன்னிவனநாதாகன்னிவனநாதா.)

மண்ணாசைப்பட்டேனைமண்ணுண்டுபோட்டதடா
பொன்னாசைபெண்ணாசைபோகேனேயென்குதே

மக்கள்சுற்றத்தாசைமறக்கேனேயென்குதே
திக்காசாமாசையதுதீரேனேயென்குதே

வித்தைகற்குமாசையதுவிட்டொழியேனென்குதே
சித்துகற்குமாசைசிதையேனேயென்குதே

மந்திரத்திலாசைமறக்கேனேயென்குதே - - ✻
சுந்தரத்திலாசைதுறக்கேனேயென்குதே - - ✻

சுட்டுவர்க்கத்தாசைகழலேனேயென்குதே - - - ✻
செட்டுதனிலாசைசிதையேனேயென்குதே - - ✻

மாற்றாஞ்சலவைமறக்கேனேயென்குதே - - ✻
சோற்றுக்குழியுமின்னுந்தூரேனேயென்குதே. (ங)

(கன்னிவனநாதா கன்னிவனநாதா.)

ஐந்துபுலனுமடங்கேனேயென்குதே - - ✻
சிந்தைதவிக்கிறதுந்தேறேனேயென்குதே - - ✻

காமக்குரோதங்கடக்கேனேயென்குதே - - ✻
நாமேயாரென்றுநாடோமென்னுதே - ✻

அச்சமாங்காரமடங்கேனேயென்குதே - - ✻
கைச்சயின்னுமானங்கழலேனேயென்குதே - ✻

நீர்க்குமிழியாமுடலைநித்தியமாயென்னுதே - ✻
ஆர்க்குமோயாசையழியேனேயென்குதே - ✻

என்னுக்குக்கண்ணெதிரேகட்டையில்வேகக்கண்டும் ✻
என்னுந்திரமாயிருப்போமென்றென்னுதே - ✻

அநித்தியத்தைநித்தியமென்றுதரவாயென்னுதே ✻
தனித்திருக்கவென்குதேதன்னைமறக்கவென்குதே ✻

நரகக்குழியுமின்றுநான்புகிப்பேனென்குதே - *
உரகப்படத்தல்குலணைக்கெடுப்பேனென்குதே - *

குரும்பைமுலையுங்குடிகெடுப்பேனென்குதே - *
அரும்புவிழியுமெந்தனாவியுண்பேனென்குதே - *

மாதருருக்கொண்டமெறவிவஞ்சமென்னுதே - - *
ஆதரவுமற்றிங்கராக்காயுருகிறண்டா - - - *

சிந்தனையின்றருளுங்கன்னிவனநாதா - - - *
எந்தவிதத்திலுனைநிப்படருவண்டா - (௨௰)

(கன்னிவனநாதா கன்னிவனநாதா.)

புல்லாகிப்பூடாய்ப்புலர்ந்தநாள்போதாதோ - *
கல்லாய்மரமாய்க்கழிந்தநாள்போதாதோ - *

கீரியாய்க்கீடமாய்க்கெட்டநாள்போதாதோ - *
நீரியாயூர்வனவாய்நின்றநாள்போதாதோ - *

பூதமொடுதேவருமாய்ப்போனநாள்போதாதோ *
வேதனைசெய்தானவராய்வீந்தநாள்போதாதோ - *

அன்னைவயிற்றிலழிந்தநாள்போதாதோ - - *
மன்னவனாய்வாழ்ந்துமரித்தநாள்போதாதோ - *

தாயாகித்தாரமாய்த்தாழ்ந்தநாள்போதாதோ - *
சேயாய்ப்புருடனுமாய்ச்சென்றநாள்போதாதோ *

நோயுண்ணவேமெலிந்து நொந்தநாள்போதாதோ *
பேயுண்ணப்பேயாய்ப்பிறந்தநாள்போதாதோ *

ஊனவுடல்கூன்குருடாயுற்றநாள்போதாதோ - *
ஈனப்பொசிப்பிலிளைத்தநாள்போதாதோ - *

பட்டகளையும்பரதவிப்பும்போதாதோ - - *
கெட்டநாள்கெட்டவென்றுகேளாதும்போதாதோ *

நில்லாமைக்கேயழுதுநின்றநாள்போதாதோ - *
எல்லாருமென்பாரமெடுத்தநாள்போதாதோ - *

காமன்கணையாற்கலைபட்டல்போதாதோ - - *
ஏமன்கரத்தாலடியுண்டல்போதாதோ - *

நான்முகன்பட்டோலைநறுக்குண்டல்போதாதோ - *
தேன்றுரைபத்தானேமிதேக்குண்டல்போதாதோ *

உருத்திரனார்சங்காரத்துற்றநாள்போதாதோ - *
வருத்தமறிந்தையிலைவாவென்றழைத்தையிலை. - (௩௨.)

(கண்ணிவனநாதா கண்ணிவனநாதா.)

பிறப்பைத்தவிர்த்தையிலைபின்னாக்கொண்டையிலை - *
இறப்பைத்தவிர்த்தையிலையென்னென்றுகேட்டையிலை

பாசமரித்தையிலைபரதவிப்பைத்தீர்த்தையிலை - *
பூசியநீற்றைப்புனையென்றளித்தையிலை - - - *

அடிமையென்றுசொன்னையிலையக்குமணிதந்தையிலை *
வீடுமுலகம்போக்கியுன்றன்வேடமளித்தையிலை - *

உன்னிலைமுழுத்தையிலை பொன்றுக்கிக்கொண்டையிலை *
நின்னடியார்கூட்டத்தினியமழைத்துணைவத்தையிலை - *

ஓங்குபரத் துள்ளொளித்தவடியார்க்கடியான் - - *
நங்கோரடியரெனமக்கென்றுரைத்தையிலை - - *

நாமந்தரித்தையிலைநாவொழிய நின்றையிலை - - *
சேவருளினைச்சிந்தித்தழைத்தையிலை - *

முத்தியளித்தையிலை மோனங்கொடுத்தையிலை - - *
சித்தியளித்தையிலை சீராட்டிக்கொண்டையிலை - *

தவிப்பைத்தவிர்த்தையிலை தாளுக்கிக்கொண்டையிலை *
அவிப்பரியதீயாமென்னாசைதவிர்த்தையிலை - - *

நின்றநிலையினிறுத்தியெனைவைத்தையிலை - *
துன்றுங்கரணமொடுதொக்கொழியப்பார்த்தையிலை *

கட்டவுலகக்காட்சிக்கட்டொழியப்பார்த்தையிலை - *
நிட்டையிலேநில்லென்றுநிறுத்திக்கொண்டையிலை.

(கன்னிவனநாதா கன்னிவனநாதா.) (௪௨)

கடைக்கணருள்தாடா கன்னிவனநாதா - - - *
கெடுக்குமலமொருக்கிக்கிட்டிவரப்பாரேடா - - *

காதல்தணியேனே கண்டுமகிழேனே - - - *
சாதல்தவிரேனேசங்கடந்தான்தீரேனே - *

உன்னைத்துதியேனோ வூர்தாடிவாரேனோ - - *
பொன்னடியைப்பாரேனோ பூரித்துநில்லேனோ - *

ஓங்காரப்பொற்சிலம்பி னுல்லாசம்பாரேனோ - *
பாங்கானதண்டைபலபணியும்பாரேனோ - - *

வீரகண்டாமணியின்வெற்றிதனைப்பாரேனோ - *
சூரர்கள்போற்றுமந்தச்சுந்தரத்தைப்பாரேனோ *

இடையிற்புலித்தோலிருந்தநலம்பாரேனோ - *
விடையிலெழுந்தருளும்வெற்றிதனைப்பாரேனோ - *

ஆனையுரிபோர்த்தவழகுதனைப்பாரேனோ - - *
மானைப்பிடித்தேந்துமலர்க்கரத்தைப்பாரேனோ - *

மாண்டார்தலைபூண்டமார்பழகைப்பாரேனோ - *
ஆண்டார்தமக்கென்றுறைந்துதிரியேனோ - - *

கண்டங்கறுத்துநின்றகாரணத்தைப்பாரேனோ - *
தொண்டர்குழுவினின்றதோற்றமதைப்பாரேனோ *

அருள்பழுத்தமாமதியாமாநநத்தைப்பாரேனோ - *
திருநயனக்கண்டையொளிருஞ்செழுங்கொழுமை பாரே
செங்குமிளின்றண்டம்வளர்சிங்காரம்பாரேனோ [னோ
அங்கனியையென்றவதரத்தைப்பாரேனோ - - *

முல்லைநிரைவெறிக்குமூரலொளிபாரேனோ - *
அல்லார்புருவத்தழகுதனைப்பாரேனோ - - *

மகரங்கிடந்தொளிரும்வண்மைதனைப்பாரோமோ *
சிகரமுடியழகுஞ்செஞ்சடையும்பாரோமோ - - *

கங்கையொடுதிங்களின்றகாட்சிதனைப்பாரோமோ - *
பொங்கரவைத்தான்சடையில்பூண்டவிதம்பாரோமோ *

சரக்கொன்றைபூத்தசடைக்காட்டைப்பாரோமோ - *
எருக்கறுகூமத்தையணியேகாந்தம்பாரோமோ - *

கொக்கிறகுசூடிநின்றகொண்டாட்டம்பாரோமோ *
ஆக்கினியையேந்திநின்றவானந்தம்பாரோமோ - - *

தூக்கியகாலுந்துடியடியும்பாரோமோ - - *
தாக்குமுயலகன்மேற்றாண்டவத்தைப்பாரோமோ *

வீசுகரமும்விகசிதமும்பாரோமோ - - - *
ஆசையளிக்குமபயகரம்பாரோமோ - - - *

அரிபிரமர்போற்றவமரர்சபசெயனைப் - - *
பெரியமமைபாகம்வளர்பேரழகைப்பாரோமோ - *

சுந்தரநீற்றின்சொகுசுதனைப்பாரோமோ - *
சந்திரசேகரனுய்த்தயவுசெய்தல்பாரோமோ (௧௨)

(கன்னிவனநாதா கன்னிவனநாதா.)

கெட்டநாள்கெட்டாலுங்கிருபையினிப்போடா - *
பட்டநாள்பட்டாலும்பதமெனக்குக்கிட்டாதோ - *

நற்பருவமாக்குமந்தநாளெனக்குக்கிட்டாதோ - *
எப்பருவமுங்கழன்றவேகாந்தங்கிட்டாதோ - - *